"கிராம அபிவிருத்திக்கு ஒரு நான்கம்சத் திட்டம்" Regd. No. M 6207

கிராமோதயம்

CONNEMARA PUBLIC LIBRARY 3 - JAN 1956 MADRAS

ஆசிரியர் : ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 திருப்பூர் - ஏப்ரல் 1 * 1954 * விலை 1 அணா இதழ் 11

"நைனுக்கவுண்டன்வலசு"

சென்ற பிப்ரவரி 1-ந் தேதியிட்ட "கிராமோதயத்தில்" நைனுக்கவுண்டன்வலசில் செய்யப்பட்டு வரும் வேலைகளைப்பற்றி எழுதியிருந்த ஒரு கட்டுரை வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும். அதில் 'பவனரில்' ஸ்ரீ விநோபாஜி காஞ்சனமுக்தி ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருப்பதை குறிப்பிட்டு அதே துறையில் வேறு விதத்தில் ஸ்ரீ வைரவலிங்கம் முயலுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனல், ஒரு நண்பர், நைனுக்கவுண்டன்வலசு குழந்தைகள் பரிசிரமாலயத்தில் உற்பத்தியாகும் கதரை விற்பனை செய்து, அதிலிருந்து கிடைக்கும் ஊதியத்திலிருந்து தானே போஜனசாலை நடைபெறுகிறது. இதில் உற்பத்தி, விற்பனை, லாபம் யாவும் வந்துவிட்ட தால் காஞ்சனமுக்தி எங்கு ஏற்படுகிறது? என்று கேட்கிருர்.

பரிசிரமாலயம் உழைப்பின் ஆதாரத்தின்மீது நடைபெற்று வருகிறது என்பதை மறந்துவிடக் கூடாது. உழைப்பு இன்று கதர் வேலையாக நடைபெறுகிறது. பஞ்சு அரைத்தல், கொட்டுதல் நூற்றல், நெசவு முதலிய வேலைகள் மூலம் அச்சிறுவர், சிறுமியர்கள் உழைக்கின்றனர். ஊர் பொதுமக்கள் கொடுத்த சுமார் ¾ ஏக்கர் நிலத்தில் இவ்வாண்டு விவசாயமும் செய்து சுமார் தங்கள் 1 மாத உணவுத் தேவையை பூர்த்தி செய்துள்ளனர். மேலும் விவசாயத்திற்குத் தகுதியான நிலமும், நீர்ப்பாசன வசதியும் கொடுக்கப்படுமேயானல் விவசாயம், கதர் வேலை, சிறு குடிசைத்தொழில்கள் மூலம் தமது வாழ்க்கையில் பணத்திற்கு இடமே அளிக்காத ஒரு முறையில் இந்த மாணவ, மாணவியர்கள் "உழைத்துண்டு வாழும்" வழியை வகுத்து விடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

— அ. நடராஜன்

அகில இந்திய கதர்–கிராமக் கைத்தொழில் கண்காட்சி – புதுடில்லி.

3—4—1954 மாலை 6 மணிக்கு புதுடில்லி ராமலீலா மைதானத்தில் மேற்படி கண்காட்சியை ஜனதிபதி ஸ்ரீ ராஜேந்திர பிரஸாத் அவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள்.

தேசமெங்கும் நடைபெறும் விசேஷ கதர் வேலைகள், கிராமக் கைத்தொழில்கள் மூலம் தயாரிக்கும் பொருட்களும், தயாரிக்கும் முறைகளும் அங்கு இடம்பெறும்.

சுமார் 15 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ் நாட்டிலிருந்து இந்த கண்காட்சியில் தான் சர்வ சேவா சங்கம் பங்கெடுத்துக்கொண்டு நமது தமிழ் நாட்டு உற்பத்திக் கதர் ரகங்களை பெருவாரியாக கண்காட்சியில் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளது. டில்லியிலும், சுற்றுவட்டாரங்களிலும் குடியேறியிருக்கும் நமது அருமைத் தமிழன்பர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்கள் தேவைக்குத்தக்க கதர் ரகங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

வடநாட்டு மோஸ்தரிலும், தென்னுட்டு மோஸ்தரிலும் சகலவிதமான ஆடை ரகங்களும் கண்காட்சியில் சர்வசேவா சங்கத்தின் கதர் வஸ்திராலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

— ப. கோவிந்தசாமி.

பருத்தி சாகுபடியும் மழையும்.

பருத்தி பெரும்பாலாக நமது தேசத்தில் புஞ்சைப் பயிராகவே மழைகாலத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. பருத்தி விவசாய காலத்தில் பெய்யும் மழைக்கும் பருத்தி உற்பத்திக்கும் நெருங்கிய உறவுள்ளது. சென்ற 1941-வது ஆண்டிலிருந்து 1951 வரை கோதாவரி தீரத்திலிருக்கும் "நாந்தேத்" பருத்தி ஆராய்ச்சி கேந்திரத்தில் நடைபெற்ற ஆராய்ச்சிகளின் பயனை சென்ற ஐந்தாவது பருத்தி சாகுபடி பிரச்னைகளைப்பற்றிய ஆராய்ச்சிகள் நடத்திய மகாநாட்டில் வெளியிடப்பட்டது. அவைகளின் சுருக்கத்தை கீழே தருகிறேம்.

மேற்படி ஆராய்ச்சி நடைபெற்ற கேந்திரம் கனமான களிமண் பிரதேசம். ஆராய்ச்சி காலத்தில் பிரதி வருடமும், ஒரே சூழ்நிலையில் ஒரே முறையான விதைப்பு, விதையின் அளவு, பருத்தி சேகரித்தல் முதலியன நடைபெற்றது. நான்கு வருடங்களுக்கு ஒருமுறை ஏக்கருக்கு 20 வண்டி கலவை உரம் இடப்பட்டு நன்கு உழுது மண்ணில் சேர்க்கப்பட்டது.

பருத்தி விதைத்தது முதல், மகசூல் கைக்கு வந்ததுவரை 7 மாதங்களில் வருடந்தோறும் பெய்த மழையும், அந்தந்த வருடங்களில் ஏக்கருக்கு உற்பத்தியான பருத்தியின் எடையும் கீழே தரப்படுகிறது.

வருடம்.	மொத்தம் பருத்தி சாகுபடி காலத்தில் (7 மாதம்) பெய்த மழை அங்குலத்தில்.	ஏக்கருக்கு உற்பத்தியான பருத்தி எடை ராத்தல்.
1941–42	21·54	783
1942–43	41·76	285
1943–44	33·77	187
1944–45	36·21	579
1945–46	27·00	565
1946–47	33·39	405
1947–48	36·75	405
1948–49	47·70	351
1949–50	44·88	156
1950–51	29·37	531

இந்த புள்ளி விபரங்களிலிருந்து பொதுவாக சாகுபடி காலத்தில் மழை அதிகரிக்க, அதிகரிக்க

(தொடர்ச்சி 52-ம் பக்கம் காண்க)

3 - JAN 1956

கிராமோதயம்

ஏப்ரல் 1 1954

கிராம அபிவிருத்திக்கு ஒரு நான்கம்சத் திட்டம்

இன்று நமது கிராமங்களில் காணும் வறுமைக்கும். நிர்க்கதியான நிலைக்கும் பல காரணங்கள் கூறப்படுகின்றன. முக்கியமாக விவசாயத்தைத் தவிர மக்கள் உயிர் வாழ்வதற்கு எவ்விதமான உப தொழில்களும் கிராமங்களில் மிஞ்சவில்லை. வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்களின் தேவைக்கேற்றவாறு அந்த பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்ய முடியவில்லை. உற்பத்தியாகும் பொருட்களை அனுபவிக்கும் உரிமை உற்பத்தியாளருக்குக் கிடைப்பதில்லை.

உதாரணமாக நமது வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதும், தவிர்க்க முடியாததுமான உணவு, உடை ஆகிய இரு பொருட்களையுமே எடுத்துக் கொள்வோம். விவசாயத்தைத் தவிர வேறு கைத்தொழில் ஒன்றும் கிராமங்களில் இன்று இல்லை என்றே கூறலாம். விவசாய வேலைகள் இல்லாத காலங்களிலும் சரி, இயற்கையின் விபரீதப் போக்குகள் காரணமாக உரிய காலத்தில் மழையின்மையாலோ, வேறு காரணங்களாலோ விவசாயம் பாதிக்கப்படுமேயானால், விவசாயத்தையே நம்பி வாழும் பெரும்பாலோருக்கும் வேலை இல்லை என்பது மட்டிலுமின்றி, வாழ்க்கைச் செலவுகளுக்காக பெரும் துகைகளை, தாங்க முடியாத வட்டிச் சுமையையும் பொருட்படுத்தாது கடன் வாங்கவேண்டி யிருக்கிறது. நிலமிருக்கும் விவசாயிகள் கடன் சுமையும், அதிக வட்டியும் கொடுத்து காலக்கிரமத்தில் நிலமில்லாதோராகி விடுகின்றனர். ஆக கிராம சமூகம் நிலமிருப்போர் நிலமில்லாதோர் என்று இரு பிரிவினர்களாக பிரிந்து கிடக்கும் வரை கிராம வாழ்க்கையில் ஒற்றுமையோ, அமைதியோ காண்பதரிது.

இம்மாதிரி ஏற்றத்தாழ்வுகளுள்ள ஒரு சமூகம் வெளியிலிருந்து பெரிய பணக்காரர்கள். நகரத் தொழிலதிபர்கள் முதலியவர்கள் நிர்ணயிக்கும் வருவாய்க்கதிகமாக பெறுதலும் சாத்தியமில்லை. விவசாயிகள் எவ்வளவு அதிகம் உழைப்பினும் சரி தமது உழைப்பின் பயனை நிர்ணயிக்கவோ, அனுபவிக்கவோ முடியாதவர்களா யிருக்கின்றனர். விவசாயிகள் உற்பத்தி செய்யும் மூலப்பொருட்களுக்கும் சரி, உணவு தானியங்களுக்கும் சரி விவசாயிகளுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய விலை கிடைப்பதில்லை. நகரத் தொழிலதிபர்கள், வியாபாரிகள், உலகப் பொருளாதார அமைப்பில் அவ்வப்பொழுது தோன்றும் கொந்தளிப்புகள் ஆகியவைகளை அனுசரித்து விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களின் விலை மதிப்பிடப்படுகிறது. இந்த விலை பணத்தைக்கொண்டு மதிப்பிடுவதினால் கிராமவாசிகளுக்கு தமது உழைப்பிற்கு விலை மதிப்பிடுவதில் அறவே பங்கு இருப்பதில்லை. இதற்கு காரணம், பணம் உற்பத்தி செய்யும் சக்தியும், அதிகாரமும். பணத்தின் மதிப்பை கூட்டவோ, குறைக்கவோ, இருக்கும் அதிகாரமும் கிராமவாசிகளிடம் இல்லை. இதன் பொருள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் நமது மக்களில் 100க்கு 75 பேர்களுக்கு தமது உழைப்பை, எங்கிருந்தோ நிர்ணயித்து உற்பத்தியாகும் பணத்தின் விபரீத விளையாட்டுகளுக்கு இலக்காக்க வேண்டியிருக்கிறது என்பதே.

இந்த விஷம சக்கரத்தில் அதிக உற்பத்தி செய்வது, கிராமக் கைத்தொழில்களை வளர்ப்பது முதலியவை யாவும், சாத்தியமாகாது. இதிலிருந்து விடுபடுவதற்கு நமது கிராம மக்கள் சில அடிப்படையான விஷயங்களில் கவனம் செலுத்தி அவைகளை தீர்ப்பதில் முயற்சி செய்யவேண்டும்.

1) முதலாவதாக கிராம ஜனங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கிராமங்களிலேயே உற்பத்தி செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். உலக நாடுகள் அனைத்தும் இன்று தமது தேவைகளை கூடிய சீக்கிரம் தங்கள் தங்கள் நாடுகளிலேயே தயாரித்துக் கொள்ள வேண்டுமென்றே விரும்புகின்றன. அதேபோல் நமது கிராமங்களும் தமது அன்றாட வாழ்க்கைத் தேவைகளில் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமான பொருட்களை தாங்களே தயாரித்துக் கொள்ள முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு மேன்மையடைய முடியும்.

2) இதற்காக கிராமத்தில் வேலை செய்ய விரும்புவோர்கள் அனைவருக்கும் உற்பத்தி சாதனங்கள் கொடுப்பது கிராம சமூகத்தின் கடமையாகும். உற்பத்தி சாதனங்களில் முக்கியமானதொன்று நிலமாகும். ஆகையால் கடவுள் படைத்த வாழ்க்கைச் சாதனங்களில் காற்றும், தண்ணீரையும் போல், நிலத்தையும் பொதுவாக்க வேண்டும். உடைமை உரிமைகளை நில விஷயத்திலும் புகுத்தலாகாது.

கிராமத்தில் உழுதுண்டு வாழ விரும்பும் எவருக்கும் நிலமிருக்கும்படி பார்த்துக்கொள்வது கிராம சமூகத்தின் கடமையாகும்.

அதேபோல் ஆடை விஷயத்திலும் கிராமத்தின் தேவைகளை கிராமத்திலேயே தயாரிப்பது மிகவும் சாத்தியம். இன்று இந்த ஜில்லாவிலிருக்கும் பல கிராமோதய கதர் சங்கங்களில் இன்றே கிராமவாசிகளுக்கு தலா வருடத்திற்கு 12 முதல் 15 சதுர கெஜம் கதர் தயாரிக்கும் அளவு நூற்று வருகின்றனர். இதன் பயனாக கிராமத்திலிருந்து மில் துணிக்காக வெளியே சென்றுகொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான ரூபாய் மிச்சமாகும்.

இவ்வாறு வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை கிராமங்களிலேயே உற்பத்தி செய்ய சாதனங்களை தேவைப்படுவோருக்குக் கிடைக்கச் செய்வதும் முதற்படியாகக் கருதப்படும்.

3) உற்பத்தி செய்யும் பொருட்களை கூடுமானவரையில் உற்பத்தியாளர்கள் உபயோகப்படுத்தும்படி செய்யவேண்டும். இதற்கு பணத்தின் உதவியை நீக்கினாலன்றி உற்பத்தி பொருட்களை அனுபவிக்கும் உரிமை மக்களிடம் தங்காது. கடன், மிதமிஞ்சிய வட்டி, வறுமை ஆக மூன்று காரணங்களினாலும் பணத்திற்காக உணவுப் பொருட்களை மலிவாக விற்பதும், உணவுக்காக அதே பொருட்களை பிறகு மிதமிஞ்சிய விலைக்கு வாங்குவதுமாக செய்வதின் காரணமாக பணத்திற்கு அடிமைப்பட்டு வாழும் பெரும்பான்மை மக்களும் தமது உழைப்பின் பயனாக உற்பத்தியாகும் பொருட்களை கிராம மக்களுக்கிடையிலேயே விநியோகம் செய்துகொள்வார்களானால் தமது உழைப்பினால் உற்பத்தியாகும் பொருட்களின் விலையை நிர்ணயிக்கும் உரிமை பெறுகின்றனர்.

4) இவைகளை செய்து முடிப்பதற்கு மக்களிடையே கூடுமானவரை சமூகக் கட்டுறவும் கட்டுப்பாடும் ஏற்படுத்தல். இதற்காக ஊர் பொதுநலனுக்காக ஐந்து அல்லது பத்து ஏக்கர்

JAN 1956

நிலம் பொதுவாக ஒதுக்கி அதை சாகுபடி செய்து அதனால் கிடைக்கக்கூடிய வருமானத்தை பொது நலனுக்காக பயன்படுத்துவதினால் அம்மாதிரி வேலைகளுக்கு நிரந்தரமான தடையாக இருக்கும் மூலதன பிரச்னையும் ஒருவாறு தீர்ந்துவிடும்.

மைப்பாறை, 15—3—'54 — கிருஷ்ணதாஸ் காந்தி

மில்லில் தீட்டிய அரிசி

மில்களில் நெல்லைக் குத்தி அரிசியாக்குவதால் அதிகமான போஷணையான சத்துள்ள தவுடு நீக்கப்பட்டு அரிசியின் அளவும் குறைக்கப்பட்டு வெண்ணிறமாக ஆக்கப்படுகிறது என்பதை நாம் யாவரும் அறிவோம். இவ்விதமாக நன்கு தீட்டப்பட்ட அரிசியை உபயோகிப்பதின் விளைவாக பெரி-பெரி என்னும் வியாதியால் ஜனங்கள் பீடிக்கப்பட்டு இறந்துவருவதும் யாம் யாவரும் அறிந்த விஷயமே. இம்மாதிரியான இயற்கையின் பயங்கரமான எச்சரிக்கையும் பொருட்படுத்தாது ஜனங்களும், ஆளும் சர்க்காரும் இதைத்தடுக்க சிரத்தை காட்டாமலிருப்பது மிகவும் ஆச்சர்யப்படக்கூடிய விஷயமாகவும் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி மில்லில் தீட்டும்பொழுது இழந்தபோஷாக்குள்ள சத்தை அரிசிக்குள் மறுபடியும் எவ்வாறு ஊட்டுவது அல்லது அரிசியில் புகுத்துவது என்ற பிரச்னை இன்று விஞ்ஞானிகளுக்கு ஒரு பெரிய பிரச்னையாக இருந்து வருகிறது.

பத்து வருஷங்களின் ஆராய்ச்சியின் பயனால் ஸ்விட்ஸர்லாண்டு டாக்டர் எம். டப்ளியூ. பர்டர் (Dr. M. W. Furter) தீட்டிய அரிசியில் உயிர் சத்து பி. 1 (Vitamin B. 1) ம் இரும்பு சத்தும் புகுத்தும் வழியைக் கண்டுபிடித்தார். ஸி. உயிர்ச்சத்தை (Vitamain C.) அரிசியில் புகுத்துவது விஞ்ஞானிகளுக்கு மிகவும் சுலபம் என்றும் 'ஏ' சத்தை (Vitamin A.) புகுத்துவது மிகவும் கடினம் எனவும் தெளிவாக்கினர்.

இவைகளெல்லாவற்றையும் கவனிக்கும்பொழுது முதலில் அரிசியை மில்லில் தீட்டும் பொழுதுநேரம், உழைப்பு. பணம் முதலியவைகளை வீணுக்குவதும் அதன் பிறகு இந்த அரிசிக்கு போஷாக்குள்ள சக்திகளை (Vitamins) விஞ்ஞான மூலம் புகுத்த செலவிடும் வீண் விரயத்தையும் காண ஜனங்களின் மடமையைக்கண்டு ஆச்சர்யப்படவேண்டியதிருக்கிறது. இயற்கையில் அமையப்பெற்ற போஷணைகளை அரிசியிலிருந்து எடுத்துவிட்டு பின்னர் செயற்கையின் மூலம் போஷணைகளை அதில் புகுத்துவதில் எத்தனைதூரம் வெற்றிபெற முடியும் என்பதும் அடுத்தபடியாக கவனிக்கப்படவேண்டிய விஷயமாகும். வயலில் விளையும் பொழுதே இயற்கையின் சக்தியால் வளர்ந்த சத்தின் அளவும் குணமும் செயற்கை முறை மூலம் சேர்க்கப்பட்ட எந்த அளவு சத்தும் ஒருபொழுதும் ஈடாகாது; குணமும் ஏற்படாது. மேலும் விஞ்ஞானிகள் சில ஒரே தன்மையில்லாத சத்துக்களை செயற்கையின் மூலம் சேர்க்கவே முடியாது எனவும் ஒப்புக்கொள்ளுகின்றனர். இத்தனையும் அறிந்தும் ஜனங்கள் சுவையற்ற தீட்டிய அரிசியை உபயோகிக்கவும், அதன் பயனாய் நோய் வாய்ப்பட்டு மடியவும் தயாராக இருக்கிறார்களே ஒழிய எல்லா சத்தும் சக்தியும் நிறைந்த நெல்லை கையால் குத்தி தீட்டி சுவையுடன் உண்ண மறுக்கிறார்கள். இவைகள் யாவும் மேல்நாட்டின் நாகரீகத்திலுள்ள மக்களின் பற்றுதல் காரணமாகவும், சோம்பலாலும் தோன்றுபவை. இம்முறையில் அரசாங்கம் தக்கநடவடிக்கை எடுப்பது அவசியமாகும். — ஸ்ரீ பரசுராம் சர்மா.

குடிசைகளில் தீப்பெட்டி தயாரித்தல்

[சென்ற 10-3-'54 தேதி அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் போர்டு அங்கத்தினரும், இந்தியாவின் தலைசிறந்த காந்நீய ஆராய்ச்சியாளருமான ஸ்ரீ சதிஷ்சந்திரதாஸ் குப்தா அவர்கள் கோவில்பட்டி வட்டாரத்தில் நடந்துவரும் நடுவப்பட்டி, கஸ்தூரி ரங்கபுரம், சங்கரபாண்டியபுரம், மேட்டுப்பட்டி முதலிய கிராமோதய கதர் சங்கங்களுக்கு விஜயம் செய்தார். அதுசமயம் ஆங்காங்கு அவர் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்படுகிறது. — ஆசிரியர்]

இன்று இந்தியாவில் வருடந்தோறும் சுமார் 320 லட்சம் குரோஸ் தீப்பெட்டிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் பெரும்பகுதி சுமார் 240 லட்சம் குரோஸ் விம்கோ என்ற அயல்நாட்டு கம்பெனியினர் தயார் செய்கின்றனர். பாக்கியுள்ள 80 லட்சம் குரோஸ் தீப்பெட்டிகள்தான் தேசமெங்குமுள்ள இதர சிறு ஸ்தாபனங்கள் தயார் செய்கின்றன.

இந்த புள்ளி விபரங்களிலிருந்து, சுமார் 32 கோடி மக்கள் வருடந்தோறும் சுமார் 3·2 கோடி குரோஸ் தீப்பெட்டிகளை உபயோகப்படுத்துகிறார்கள். அதாவது 10 பேர்களுக்கு வருடத்திற்கு 1 குரோஸ் தீப்பெட்டி, அல்லது தலா வருடத்திற்கு 14 தீப்பெட்டிகள் தேவைப்படுகிறது. 40 குச்சிகள் உடைய தீப்பெட்டிகளையும் 60 குச்சிகளிருப்பவைகளாகவே கணக்கிடப்படுமேயானால் தலைக்கு வருடத்திற்கு சுமார் 10 தீப்பெட்டிகள் வேண்டும் என்று தெளிவாகிறது.

இன்று இந்தத் தொழில் யாவும் முதலாளித்துவ முறையில் நடைபெறுகிறதே யின்றி கூட்டுறவு முறையில் மக்கள் ஒத்துழைப்பின் பேரில், சுரண்டலற்ற ரீதியில் நடைபெற வில்லை. தேசத்திற்கு தேவையுள்ள தீப்பெட்டிகளில் பெரும் பகுதியை தயாரிக்கும் சக்தி வாய்ந்த விம்கோ போன்ற பெரும் முதலீட்டு ஸ்தாபனத்துடன் போட்டியிட்டு தமது உற்பத்தியை விற்பனை செய்யும் சக்தி மற்ற சிறு தொழிலதிபர்களுக்கு இருப்பது அரிது. சிறு தொழிலதிபர்களிடையேயும் கடுமையான போட்டி யிருப்பதால் தொழிலாளிகளுக்கு மிகவும் குறைவான கூலி கொடுத்துத் தான் இச்சிறு ஸ்தாபனங்கள் தங்கள் உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்க வேண்டியுள்ளது.

மக்கள் கூட்டுறவினால் ஒரு சிறு தொழிற்சாலை நடத்தி கட்டுப்பாடான முறையில் பல கிராமங்கள் சேர்ந்து தமது மார்க்கெட்டை பாதுகாத்துக்கொண்டால்தான் இந்தத் தொழிலை தேச நலனுக்காக சிறு கைத்தொழிலாக மாற்றியமைக்க முடியும். அவ்வாறு மாற்றி யமைப்பதுதான் நமது தேசநலனுமாகும். இவ்வாறு சிறு ஸ்தாபனமாக மாற்றி யமைப்பதற்கு 10 பேர்கள் முழு நேர வேலை செய்யும் ஒரு சிறு ஸ்தாபனம்கூட தினந்தோறும் 10 குரோஸ் தீப்பெட்டி தயாரித்து விடும். வருடத்திற்கு சுமார் 300 நாட்கள்தான் வேலை செய்யும் என்று கருதினால்கூட இந்த சின்னஞ் சிறு ஸ்தாபனம் வருடத்திற்கு 3,000 குரோஸ் தீப்பெட்டிகள் தயாரித்துவிடும். இவ்வளவு தீப்பெட்டிகளையும் உபயோகப்படுத்துவதற்கு சுமார் 30,000 ஜனங்களடங்கிய ஒரு மார்க்கெட் பாதுகாக்கப்படவேண்டும். நமது கிராமங்களின் சராசரி ஜனத்தொகை சுமார் 500 என்று வைத்துக்கொண்டால் இந்த மார்க்கெட் சுமார் 60 கிராமங்களடங்கியதாக இருக்கும். இதன் பொருள், சுமார் 60 கிராமங்களிலிருக்கும் ஒரு பகுதி ஒத்துழைத்தாலின்றி இந்த சின்னஞ் சிறு ஸ்தாபனம்கூட நீடித்து நடைபெறமுடியாது.

கதர் வேலையில் இன்று ஒரு கேந்திர ஸ்தாபனத்துடன் ஒத்துழைத்துவரும் கிராமோதய கதர் சங்கங்கள் அக்கம்பக்கத்திலுள்ள சுமார் 60 முதல் 100 கிராமங்கள் வரையில் ஒன்று சேர்ந்து தீப்பெட்டி தொழிலையும் கூட்டுறவு முறையில் சிறு சிறு ஸ்தாபனங்களாக நிறுவி இவ்வாறு பயன் அடையலாம். தீக்குச்சிகளும், பெட்டிகளும் இன்று பெரிய தொழிற்சாலைகளில் தயாராகி வருவதுபோல்தான் நமது கிராமக் கைத்தொழில்களுக்கும் தயாராகி வரவேண்டுமென்பதில்லை. நாடெங்கும் மூங்கில் மலிவாகக் கிடைக்கும். மூங்கிலை கையினாலேயே சீவி குச்சிகள் வெகு சுலபமாக நமது சிறுவர்களும், முதியோர்களும் தயாரித்து விடுவார்கள். கிராமங்களில் வீணாக்கப்படும் கந்தல், குப்பைக் காகிதம் முதலியவைகளைக்கொண்டு அழகான அட்டைப் பெட்டிகளையும் கிராமப் பெண்மணிகளே தயாரித்துவிடலாம். இந்த உப தொழில்கள் மூலமாகவும் கிராமத்தில் சில குடும்பத்தினர் பிழைக்க முடியும்.

இவ்வாறு மக்கள் ஒற்றுமையில் தோன்றும் சிறு சிறு கூட்டுறவு ஸ்தாபனங்களின் முயற்சியால் தான் இத்தொழிலை அந்நிய முதலாளிகளின் கைப்பிடியிலிருந்து விடுவித்து கிராமக் குடிசைகளில் நடைபெறச் செய்ய முடியும். இதற்கு கிராமோதய கதர் சங்கங்களிடையே தொடர்பும், நட்பும் ஏற்பட்டு முயற்சியும் தோன்றுமாயின், அரசாங்கமும் போதிய ஊக்கமும், உதவியும் அளிக்கத் தயாராக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சங்கரபாண்டியபுரம்,
10—3—1954 } — சதீஷ் சந்திரதாஸ் குப்தா

"ஏகாம்பரநாதன் ராட்டை ஆராய்ச்சிகள்."

ராட்டையில் மணிக்கு 2 சிட்டம் சராசரி வேகம் வரவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாதிரியான வேகத்தை அடைந்த பின்னர் பஞ்சிலிருந்து நெசவு வரை 5 மணி நேரத்தில் ஒரு சதுர கெஜம் நெய்து முடிக்க வேண்டுமென சர்க்கா சங்கம் விரும்புகிறது. இதை பூர்த்தி செய்ய தொண்டர்களும் கிராமத்து ஜனங்களும் முயற்சி செய்து வருகிறார்கள், அதுவும் கூடிய விரைவில் பூர்த்தியாகும்.

ராட்டையில் மட்டும் குறிப்பிட்ட வேகம் வந்துவிட்டது. நெசவிலும் வேகத்தை அடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆராய்ச்சியின் மூலம் கிராமத்திலுள்ள ஜனங்களும் நூற்போர்களும் சுயதேவை பூர்த்தியாளர்களாக மாறுவதுடன் மில் துணியை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் கிராமத்திற்கு ஏற்படாது.

தொண்டர்களில் இதுவரையில் நூற்பில் அதிக வேகத்தை அடைந்தவர்கள் பெயர்
(சராசரி 1 மணிக்கு)

திருப்பூர் விபாக்		
வி. சுவாமிநாதன்	12 நெ.	3 சிட்டம்
எம். மாணிக்கவாசகம்	14 „	$2\frac{1}{4}$ „
மதுரை விபாக்		
ஏ. பெருமாள்	14 „	2 „

ஸ்ரீ ஏகாம்பரநாதன் ராட்டையில் கிராமத்து பெண்கள் கூட சுலபமாக நூற்க முடிகின்றது. முதல் நாள் 7 பெண்கள் 33 மணியில் 24 சிட்டமும் இரண்டாவது நாள் 8 பெண்கள் 42 மணியில் பஞ்சு உடைத்து 28 சிட்டமும் மூன்றுவது நாள் 16 பெண்கள் 33 மணியில் பஞ்சு உடைத்து 43 சிட்டமும் நூற்றுள்ளார்கள். இவர்களில் திறமையாக உள்ளவர்களின் வேகம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது.

— டி. வி. தண்டபாணி

(49-ம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தி சாகுபடியும், மழையும்

உற்பத்தி குறைகிறது என்பதைக் காணலாம். மேலும், மழை அதிகரிக்க அதிகரிக்க காய் பிடிக்காத செடிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தே வருகிறது என்றும் தெரியவருகிறது.

இங்கு ஆராய்ச்சி காலத்தில் ஆராய்ச்சிப் பண்ணையில் வருடம் சராசரி 21·54 முதல் 47·70 வரை மழை பெய்திருக்கிறது. மழையின் அளவைக் கொண்டு இங்கு ஆராய்ச்சி காலத்தை மூன்றாக பிரிக்கலாம்.

1. 3 வருடங்கள் மழை 20 முதல் 30 இஞ்சு வரை
2. 4 „ „ 30 „ 40 „
3. 3 „ „ 40 „ 50 „

இந்த மூன்று பிரிவுகளிலும் சராசரி ஏக்கரில் விளைந்த பருத்தியின் அளவும், ஏக்கரில் சராசரி வளர்ந்த பருத்தி செடிகளும் அதில் காய் பிடிக்காத செடிகளின் விகிதமும் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

பிரிவு.	மழை	சராசரி ஏக்கருக்கு பருத்தி உற்பத்தி ராத்தல்.	சராசரி ஏக்கரில் வளர்ந்த பருத்தி செடிகள் எண்.	காய் பிடிக்காத செடிகளின் விகிதம்.
1.	20"–30"	626	69,510	9·5%
2.	30"–40"	398	62,308	16·9%
3.	40"–50"	264	60,193	[illegible]%

மிகக் குறைந்த 22" மழை பெய்த வருடத்தில் தான் மிகவும் அதிக மகசூல் 783 ராத்தல் கிடைத்திருக்கிறது. கனமான களிமண் பிரதேசத்தில் சாதாரணமாக சராசரி 20" முதல் 30" வரை மழை பெய்யும்பொழுது தான் நல்ல பருத்தி மகசூல் கிடைத்திருக்கிறது. 30 அங்குலத்திற்குமேல் மழை பெய்தால் மகசூல் குறைந்துவிடுகிறது. 40 அங்குலம் மழைக்குமேல் மழை பெய்தால் மகசூல் மிகவும் குறைந்துவிடுகிறது. அதேபோல் காய் பிடிக்காத செடிகளும், மழைக்குத்தக்கவாறு அதிகரிக்கிறது என்றும் தெரிகிறது.

ஆகையால் பருத்தி சாகுபடி காலத்தில் பெய்த மழையின் அளவைக்கொண்டு, மகசூலை மதிப்பிடுவது மிகவும் சாத்தியமே என்று தோன்றுகிறது. ஆனால் இந்த புள்ளிவிவரங்கள் 10 வருட அனுபவத்தையே குறிப்பிடுவதால் தற்காலிகமாகவே கருதப்படவேண்டும். இந்த 10 வருடங்களிலும் 1943–44, 1945 ஆண்டுகள் மழையைப் பொறுத்த வரையில் அசாதாரணமாகையால் இந்த ஆராய்ச்சியில் சேர்க்காமலிருப்பதே நலம் என்று தோன்றுகிறது. ஆயினும் ஆராய்ச்சியின் முக்கிய முடிவுகள் பொருத்தமாகவே தெரிகிறது.

— என். எஸ். சுப்பிரமணியம்

(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)

இந்த இதழில்

பருத்தி சாகுபடியும், மழையும்	49
கிராம அபிவிருத்திக்கு ஒரு நான்கம்ச திட்டம்	50
மில்லில் தீட்டிய அரிசி	51
குடிசைகளில் தீப்பெட்டி தயாரித்தல்	51
ஏகாம்பரநாதன் ராட்டை-ஆராய்ச்சிகள்.	52

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0–1–0 வருட சந்தா ரூ. 1–8–0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.